# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**MCOP. No. 25/2018** **Date: 04.08.2022**

**பெயர் - தாமரைக்கண்ணன் - (PW1)**

**முதல் விசாரணை தொடர்ச்சி ( சத்தியபிரமாணத்தின் பேரில்)**

மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 14 ஆவணங்களை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ளேன். முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1, காயச் சான்றிதழின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2, மருத்துவமனை வெளியேற்றக் குறிப்புகளின் எண்ணிக்கைகள் 2 அசல் ம.சா.ஆ.3, எம் ஆர்.ஐ ஸ்கேன் ரிப்போர்ட்டின் அசல் ம.சா.ஆ.4, குற்றப்பத்திரிக்கையின் அசல் ம.சா.ஆ.5, மாதிரி வரைபடத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6, மருத்துவ பில்களின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7, TN 52 S 6826 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் பதிவுச் சான்றிதழின் நகல் ம.சா.ஆ.8, TN 52 S 6826 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் இன்சூரன்ஸ் பாலிசியின் நகல் ம.சா.ஆ.9, TN 52 U6160 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா-ஆ.10. 1-ம் எதிர்மனுதாரரின் பழகுநர் ஓட்டுநர் உரிமத்தின் நகல் ம.சா.ஆ.11, மனுதாரரின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் ம.சா.ஆ.12, மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் ம.சா.ஆ.13, குற்ற வழக்கின் முடிவு அறிக்கையின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக கேட்டுகொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை:**

( எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அவர்களின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- தாமரைக்கண்ணன்

Sd/- S. Uma Maheswari,
Sub Judge, Sankari.